கம்பன்

இசை மாலை

ACC NO:- 36011

திரு. கம்பன் அடிப்பொடி

கம்பன் இசை மாலை


30-3

★

திரு. கம்பன் அடிப்பொடி

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
36011

கம்பன் கழகம்
"கற்பகச்சோலை"
1, வெள்ளையன் செட்டியார் சாலை, சென்னை-600 085



கம்பன் பள்ளிபடைக் கோயிலில் வழிபாடு

30-3

காணிக்கை :



'கம்பன் அடிப்பொடி'
என்றே தன் பெயரை
மாற்றிக் கொள்ளும்
அளவிற்கு
கம்பனிடமும்,
கன்னித் தமிழிடமும்
மாறாத ஈடுபாடும்
தீராத காதலும்
கொண்டிருந்த
அமரர், காரைக்குடி.
சா. கணேசன் அவர்கள்
நினைவிற்கு.

— சென்னைக் கம்பன் கழகத்தார்

இறை வணக்கம்

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்,
நிலைபெ றுத்தலும், நீக்கலும் நீங்கலா,
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.

“கம்பன் இசை வணக்கம்”

திரு. “கம்பன் அடிப்பொடி”

திருவழுந் தூர்வரு தேவே போற்றி
அருள்வழி உணர்த்துபேர் அந்தண போற்றி
தமிழ்தவம் செய்தமா தவமே போற்றி
அமிழ்தினும் இனியசொல் அருளினை போற்றி
உலகமா கவிஎன ஒளிர்வாய் போற்றி
கலைகளின் பெருங்கடல் கடந்தாய் போற்றி
பொன்னித் துறைதவழ் புனித போற்றி
கன்னித் தமிழ்த்திறம் காட்டினை போற்றி
முத்தமிழ்த் துறையின் வித்தக போற்றி
சித்தம் அழகிய சேவக போற்றி.

இதிகா சத்துறை ஏறே போற்றி
விதிவலி உணர்த்தும் மதிவல போற்றி
சாத்திரம் நன்குணர் சதுரனே போற்றி
பாத்திரம் சுவைசெயும் பாவல போற்றி
புவிமுழு தளந்த புலவனே போற்றி
கவிஞரில் ஓங்கிய கலைஞனே போற்றி
மாயாப் புகழொடு வாழ்வாய் போற்றி
தாயாய் அறத்தைத் தாங்குவாய் போற்றி
பெண்மைக் குயர்வு பேணுவாய் போற்றி
உண்மைக் குருவம் உதவினை போற்றி.

நடையில் நின்றுயர் நாயக போற்றி
சடையன் புகழ்விரி தலைவ போற்றி
இறைஉயிர் முறைஅறி எம்மான் போற்றி
பொறைசயத் துறைஎனும் புனித போற்றி
கற்பனைத் திறம்பல கவித்தனை போற்றி
அற்புதம் படைக்கும் அரசே போற்றி
காவிய வானக் கதிரவ போற்றி
ஓவியக் கவிதைக் கொருவனே போற்றி
விருத்தக் கவிக்கொரு வேந்தே போற்றி
கருத்துப் புரட்சிக் கவிஞனே போற்றி

என்றுமுள தென்தமிழ் இயம்பினை போற்றி
தென்றலைப் புலியாய்ச் செய்வாய் போற்றி
இராமாவ தாரம் ஈந்தாய் போற்றி
பராவரும் கவிவலம் படைத்தாய் போற்றி
வான்மிக மணிக்கொளி வழங்கினை போற்றி
கோன்மை நெறிஉணர் கொற்றவ போற்றி
வெண்ணெய் வளர்த்த விளக்கே போற்றி
மண்ணில் வாழ்ந்த வானவ போற்றி
அலகிலா விளையாட் டறிவே போற்றி
உலகெலாம் போற்றும் உத்தம போற்றி 40

பெருமையே வடிவாய்ப் பிறங்குவாய் போற்றி
அருமையைச் சொல்லில் அமைத்தாய் போற்றி
பலகலை ஆர்ந்த பனிமதி போற்றி
உலகம் பொதுஎன உரைத்தனை போற்றி
அனைத்துயர் காப்பியம் ஆக்கினை போற்றி
மனத்துவம் நன்குணர் மன்னவ போற்றி
மாயா சனகனை வடித்தனை போற்றி
தோயாத் துறையிலாத் தோன்றலே போற்றி
தத்துவ நிலைதெரி சத்துவ போற்றி
சித்திரம் எனக்கவி தீட்டினை போற்றி

வள்ளுவன் நெறிசெலும் வள்ளலே போற்றி
ஒள்ளிய துணர்ந்தநல் உணர்வோய் போற்றி
காவிரி நலமுணர் காதல போற்றி
பாவிகம் முழுதுணர் பருணித போற்றி
மெய்ப்பா டுணர்ந்திடும் விபுதா போற்றி
துய்ப்பார்க் கினித்திடும் சொல்வல போற்றி
பவித்திரப் பெருங்கதை பகர்ந்தாய் போற்றி
செவிக்குறு தேன்பொழி செம்மலர் போற்றி
மக்களுக் குரிமை வரித்தனை போற்றி
தக்கநற் கவிதைத் தச்சனே போற்றி

நுண்கலை உணர்த்திடும் நூலோய் போற்றி
வண்கவிச் சக்கர வர்த்தியே போற்றி
கல்வியிற் பெரிய கடலே போற்றி
செல்நெறி காட்டும் தேசிக போற்றி
அமர காவிய அமுதே போற்றி
சமரம் காட்டலில் சமனிலி போற்றி
செந்தமிழ்க் குயர்வருள் செம்மலே போற்றி
அந்தமில் சுவைபொழி அண்ணல் போற்றி
உலகுடன் பிறப்பென உணர்த்தினை போற்றி
விலகலாப் பொருளுரை மேலவ போற்றி

வேதாந் தப்பொருள் விரித்தனை போற்றி
நாதாந் தத்துறை நாவல போற்றி
அழுக்கறு நெறிதரும் அறவோய் போற்றி
ஒழுக்கம் பேணிடும் ஒண்தவ போற்றி
கற்பு நெறிக்கொரு காவல போற்றி
சொற்பொருள் கணித்த தூயோய் போற்றி
திருக்குறள் விரிவுரை செய்தவ போற்றி
மருட்கொளா நெறிவளர் மாண்பினை போற்றி
துன்பிலே சுகமெனச் சொல்லினை போற்றி
அன்பதே ஆக்கம்என் றறைந்தனை போற்றி

கவியினுக் கணிஎனும் கண்ணே போற்றி
செவிநுகர் கனியருள் சிற்குண போற்றி
படைக்கலப் பரிசுணர் பண்பனே போற்றி
அடைக்கலம் காக்குநல் அருளோய் போற்றி
ஆன்றவிந் தடங்கிய ஐயா போற்றி
சான்றவர் இனத்தொரு தக்கோய் போற்றி
அம்பிகா பதிதரும் அத்தா போற்றி
கும்பிட்டு வாழ்கிலாக் குலபதி போற்றி
அந்தியைக் காலனாய் ஆக்குவாய் போற்றி
சந்தமார் சுவைவளம் தந்தனை போற்றி 90

நாடக அணிக்கொரு நாதனே போற்றி
வீடுறு நெறியதும் விளக்கினே போற்றி
மறைப்பொருள் விளக்கிடும் மாதவ போற்றி
பிறப்பெலாம் சமனெனப் பேசுவாய் போற்றி
தமிழ்ப்பண் பாட்டின் தாயே போற்றி
நிமிர்கடன் உணர்த்தும் நெறிவல போற்றி
யாரொடும் பகைகொளேல் என்றவ போற்றி
போரொடுங் கிடவழி புகன்றவ போற்றி
மக்களே உயிர்என வகுத்தனே போற்றி
மன்னனே உடலென மாற்றினே போற்றி. 100

அறிவினுக் கறிவினை அறிபவ போற்றி
செறிபெரும் கேள்விச் செல்வனே போற்றி
சமய நோக்கினில் சமரச போற்றி
குமரித் தமிழ்க்கொரு கோவே போற்றி
மானிடப் பெருமை வளர்த்தனை போற்றி
தேனிசைத் தமிழின் தெய்வமே போற்றி
நாட்டரசன் கோட்டை நயந்தாய் போற்றி
போற்றி கம்பனே போற்றி போற்றி. 108

உன்னை உள்ள படியறியேம்;
உலகை உள்ள திறமுள்ளேம்;
பின்னை அறியேம், முன்னறியேம்,
இடையும் அறியேம்; பிறழாமல்
நின்னை வணங்கி நீவகுத்த
நெறியில் நிற்கும் அதுஅல்லால்,
என்னை அடியேம் செயற்பால?
இன்பம் துன்பம் இல்லானே!

— கம்பன்

வாழிதமிழ் நாகரிகம்
  வாழிதமிழ்ப் பண்பாடு
வாழிதமிழ் வேதமருள்
  வள்ளுவனுர்—வாழியரோ
இன்பம் பெருக
  இருசெவியும் தேன்பாய்ச்சும்
கம்பனும் எங்கள்
  கவி.

அடியேனை அடிமைகொள் அது எதுவோ?

திரு. கம்பன் அடிப்பொடி

[அடிதோறும் 26 எழுத்துக்களால் ஆன அளவியல் சந்த விருத்தம்]

நரைசிறி தில்லென வளர்சிகையோ?
நவைஇலை எனஒளிர் விரிநுதலோ?
அருள்ஒளி குளிர்தரும் இணைவிழியோ!
அமுதுகு கனிஇதழ் மலர்வாயோ?
விரைநிறை திரளிரு வளர்புயமோ?
மிளிர்எழு எனநிமிர் இருகரமோ?
அரதன மணிவடம் தவழ்உரமோ?
அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 1

சதுர நல் வடிவமை குடங்கையதோ?
சவிநிறை மணியன உகிரவையோ?
துதிபெறும் அரசிலை பொருவயிறோ?
துகளுறும் உடைதிகழ் இடையதுவோ?
முதிர்அகில் எனஒளிர் தொடையவையோ?
முரல்வரு கயல்நிகர் இருகழலோ?
அதிநிற மலர்புரை பதயுகமோ?
அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 2

செவிநுகர் கனியருள் திறனேயோ?
திருமறை நெறிபயில் உளமேயோ?
உவநிட முழுதுணர் உயர்வேயோ?
உலகொரு குலமெனும் உணர்வேயோ?

புவிமுழு தளவிடு புலனேயோ?
புகலருள் அறமுறை நெறியேயோ?
அவிநய முதல்வளர் கலையேயோ?
அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 3

மணி—மணி எனஒலி ஒளிர்மொழியோ?
மனிதரை அளவிடு மதிவழியோ?
பணிமுதல் உயிரினம் கணிநெறியோ?
பவுதிக முதல்நிமிர் கலைநிறைவோ?
துணிபொருள் உயிர்நிலை சொலுமுறையோ?
துரிசறு நெறிபல தெரிதரலோ?
அணுவையும் அலகிடும் அறிவதுவோ?
அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 4

மறையுடன் கலைகளின் நிலையுறவோ?
மனுமுதல் அறமுணர் திறமதுவோ?
இறையதன் தனிநிலை உணர்தரவோ?
இசையொடு பரதமும் உரைவலமோ?
செறிவுடை நிலவியல் தெளிமதியோ?
செடிகொடி இயல்தெரி தெருளதுவோ?
அறிவினுள் அறிவினை அறிபுலமோ?
அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 5

உளவியல் நனியுணர் தனிமதியோ?
உயிரதன் உயிரினை உணர்திறமோ?
களவியல் அறம்புணர் கவினதுவோ?
கதிர்முதல் வெளியின கணிமுறையோ?

மளமள எனஉதிர் கவிவலமோ?
    மரபது பிறழ்கிலை எனுமியல்போ?
அளவியல் கவிபல அருள்நிலையோ?
    அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 6

இருமையும் பெறஅருள் கதைநிறைவோ?
    எழில்ரகு பதிமுதல் கலனடைவோ?
பொருகள வருணனை புரிதிறமோ?
    பொதுஎன உலகினை உரையறமோ?
வருபுனல் அதுகொடு மறைமுதலை
    மனம்நிறை கொளஉரை பதிஉணர்வோ?
அருமையுள் அருமையை அறிபவனே!
    அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 7

உயர்வற உயர்கவி தருமெழிலோ?
உலகுள பொருளள விடுமதியோ?
உயிருடல் உறவுரை உரனதுவோ?
ஒழுகியல் நெறிபுகல் தகவதுவோ?
செயிரற அருள்நெறி தெளிதரவோ?
திகழ்மத சமரச தரிசனமோ?
அயர்வற அமுதுகு கவிவலவ!
அடியெனை அடிமைகொள் அதுளதுவோ? 8

குறுமுனி அருள்கலை செறிமனமோ?
குலவுபல் சுவடிகள் பயில்வளமோ?
மறுவறு நிலைமதி பெறுவளமோ?
வடகலை யொடுபல மொழியறிவோ?

உறுபகை வரையறை செயும்நலமோ?
உவமைகள் தருமிகு மனுபவமோ?
அறுவகை அரசியல் அறிபுலவ!
அடியெனை அடிமைகொள் அதுஎதுவோ? 9

தினைஅள வறிவிலன் எனஅறிந்தும்,
சிறியவன் செயலிலும் எனஉணர்ந்தும்,
பனையினும் மிகஉயர் பருணித! நீ
பரிவது நிறைதரும் எளிமையினல்
எனையுநின் அடியவன் எனஉடையாய்
எவையினும் உயர்தமிழ்ப் பெருமைகளே
நினைவினில் நிலைபெற உதவுகம்ப!
நினதிரு வடிமலர் சரணெனக்கே! 10

ஏதேனும் ஆகேனே?

திரு கம்பன் அடிப்பொடி

—◇—

காப்பு:

திடமுடைய கலைகளெனும் செழுநதிகள் புகமண்டும்
கடலெனவே திகழ்வானை, கம்பன்எனும் பெரியானை,
இடமுடைய உலகெல்லாம் ஏத்துபுகழ் உடையானை,
உடல்படிய நிலம்பணிந்து உளம்படிய வாழ்த்துவெனே!

காப்பியத்தின் கட்டளையாய்,
கவித்துவத்தின் முத்திரையாய்,
மாப்பெரிய தத்துவங்கள்
மனத்துணர்த்தும் திருவிளக்காய்,
கோக்கவிஞர் குலவேந்தாய்க்
குலவுமொரு கம்பன்தன்
பாப்புனையும் கரந்தழுவும்
பணியேடாய் ஆகேனோ? 1

வழியறியாக் கடையேற்கும்
வழிகாட்டி வாழ்வளித்துப்
பழியறியா நெறிகூட்டிப்
பைந்தமிழ்த்தாய் பதமலரில்

வழிதேறல் மாந்தவருள்
    மாகவிஞன் கம்பன்தன்
எழில்விரல்கள் பிடித்தெழுதும்
    எழுத்தாணி ஆகேனோ? 2

செம்பதுமத் திருவடியான்
    தேசுமிகு மலர்முகத்தான்
அம்பெரிய தடக்கையான்
    அகன்றதிரு மணிமார்பான்
வம்புசுவைத் தேனொழுகும்
    வாக்குடையான் கம்பனெனும்
எம்பெருமான் இருந்தருளும்
    எழிற்பீடம் ஆகேனோ? 3

வானகத்தில் கொலுவிருக்க,
மண்ணகத்தில் ஆட்சிசெய,
ஞானநிலை பெற்றுய்ய,
நான்சிறிதும் விரும்புகிலேன்;
ஆனபெரும் கவியுலகின்
அற்புதனும் கம்பனவன்
போனகத்தை மகிழ்ந்துண்ணும்
பொன்வட்டில் ஆகேனோ? 4

மண்ணுலகில் வந்தகவி
வாணர்களில் மற்றெவரும்
திண்ணமுற இவனைப்போல்
திகழ்ஒருவர் இல்லைஎனும்

விண்ணளவு புகழ்தழுவும்
வித்தகனும் கம்பனெனும்
புண்ணியன்தன் பால்பருகும்
பொற்குவளை ஆகேனோ? 5

சந்ததமும் தமிழ்த்தாயின்
தவமுணர்த்தும் தனிப்புதல்வன்
எந்தைபிரான், என்னாசான்,
என்தெய்வம், என்னுடையன்
சிந்தைசெவி தேன்பாய்ச்சும்
செழுங்கவிஞன் கம்பனவன்
அந்தமிகு அரைதழுவும்
ஆடையதாய் ஆகேனோ? 6

சித்தமெலாம் அன்பரும்பச்
செய்கையெலாம் அறம்மலரச்
சத்தியமே மணம்பரப்பத்
தமிழ்வளமே நெறிசிறக்க
உத்தமநற் காப்பியத்தை
உவந்தளித்த கம்பன்தன்
உத்தரியம் ஆகுமொரு
உயர்பேறன் ஆகேனே? 7

எழுத்துலகில் இதற்குநிகர்
இல்லையென அறிஞரெலாம்
வழுத்துபுகழ் இராமகதை
மண்ணவர்க்குத் தானீய்ந்த

விழுத்தமிழின் சுவையோடு
வீறுமுணர் என்னப்பன்
கழுத்திலொளிர் மணிமாலைக்
கடைமணியாய் ஆகேனோ? 8

செய்களெலாம் பொன்விளையும்
செழும்பொன்னி வளநாட்டில்
பொய்,கயமை இன்மைஎலாம்
போயகல அவதரித்து
மெய்,வாய்மை உண்மையவை
விளக்கியருள் கம்பனவன்
கையிலொரு குடையாகக்
கடையன்யான் ஆகேனோ? 9

தொல்லையறம் கணித்தளந்தான்;
  சொல்லின்வளம் எடுத்தளந்தான்;
எல்லையில்நூல் முகந்தளந்தான்;
  எம்மருங்கும் புகழ்நிறைந்தான்;
புல்லறிவிற் கடையேற்கும்
  புகலளித்த கம்பனவன்
மெல்லெனவே துயில்கொள்ளும்
  மெத்தைஎன ஆகேனோ?

வேதமுடன் உபநிடதம்,
  விளங்குபெரும் ஆகமங்கள்,
நீதிலற நூல்களுடன்
  சிறந்தபல காப்பியங்கள்,

காதலுடன் கற்றவற்றின்
கரைகண்ட கம்பனவன்
ஆதரித்துப் பயன்படுத்தும்
அடைப்பையாய் ஆகேனே? 11

கோக்கவிஞர் எல்லாரும்
கும்பிட்டு நிற்கஉயர்
மாக்கவிதை வார்த்துநமை
மகிழ்கடலில் ஆழ்த்துகிற
வாக்குமனம் செய்கைஎலாம்
மாண்புநிறை கம்பன்கைப்
பாக்குவெட்டி எனவிளங்கும்
பாக்கியனாய் ஆகேனே? 12

ஆன்பாலும் வரைத்தேனும்
அடிக்கரும்பும் முக்கனியும்
வேம்பாக ஆகிடவே
வியன்கவிதை வடித்தளிக்கும்
மேம்பாடு மிகவுடைய
மெய்ப்புலவன் கம்பனவன்
தான்போடும் வெற்றிலையாம்
தவமுடையேன் ஆகேனோ? 13

எட்டுவகை மெய்ப்பாடும்
எண்ணூறும் உளப்பாடும்
சொட்டுபெருங் காப்பியத்தைச்
சுவைத்தமிழில் உபகரித்த

பட்டறிவுப் பெட்டகமாம்
பாரளந்த கம்பனவன்
சுட்டுவிரல் தொட்டருளும்
சுண்ணும்பாய் ஆகேனே? 14

உள்ளமெலாம் களிகூர
ஓதும்நா தேனூற
அள்ளஅள்ளக் குறையாத
அருஞ்சுவையார் கவிகள்நிறை
பள்ளமெனத் திகழுமொரு
பருணிதனும் கம்பனெனும்
வள்ளலவன் ஏறுபெட்டி
வண்டிஎன ஆகேனே? 15

பண்டிதராய், பாமரராய்,
பார்த்திபராய், மற்றவராய்
எண்டிசையும் வாழ்வார்கள்
எல்லோரும் பாராட்டிக்
கொண்டாடும் கவிகுலத்துக்
கோவேந்தாம் கம்பனவன்
வண்டிதனை இழுக்குமொரு
மாடாக ஆகேனோ? 16

மால்படிந்த அடிநாயேன்
மனத்துயரம் தீர்த்தவனும்
நூல்தேர்வார் எல்லார்க்கும்
நுவல்அரிய முழக்கோலாய்

நால்வகைசொல் நூற்பயனை
  நனியளக்கும் கம்பனவன்
கால்தேய்க்கும் பேறுபெறும்
  கருங்கல்லாய் ஆகேனே? 17

ஒப்பற்ற பாத்திரங்கள்,
  ஒவ்வொன்றும் நனிசிறக்க
எப்போதும் வாடாத
  எண்ணற்ற நிகழ்ச்சிகளைத்
தப்பேதும் இல்லாமல்
  தந்தகவி கம்பன்தன்
மெய்ப்போதாம் பதயுகத்தின்
  மிதியடியாய் ஆகேனே? 18

வழுவற்ற அன்பறத்தின்
வழிமுற்றும் காட்டிநமைப்
பழுதற்ற நெறிசெலுத்தப்
பாருலகில் அவதரித்த
முழுதுற்ற பேரறிவின்
மொய்ம்புருவாம் கம்பனவன்
செழுமுற்றம் பெருக்குமொரு
திருவலகாய் ஆகேனோ? 19

முந்தையர்கள் அருள்நெறியை
முழுதுமனு சரித்துவரும்
பிந்தையர்கள் கடைபிடிக்கப்
பெருநெறியை நன்குணர்த்தும்

சந்தம்நிறை காப்பியத்தைத்
　தந்தருளும் கம்பனெனும்
எந்தைபிரான் சன்னிதியில்
　ஏதேனும் ஆகேனோ? 20

———